# செப்டம்பர் – 22 – சனி

**புனித வில்நோவா தோமஸ்**

**கடவுளின் வாக்கை நான் புகழ்கின்றேன்: ஆண்டவனின் வாக்கை நான் புகழ்கின்றேன். திபா. 56:10**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 15: 35 – 37,42 –49

சகோதர சகோதரிகளே "இறந்தோர் எப்படி உயிருடன் எழுப்பப்படுவார்கள்? எத்தகைய உடலோடு வருவார்கள்?" என ஒருவர் கேட்கலாம். அறிவிலியே, நீ விதைக்கும் விதை மடிந்தா லொழிய உயிர்பெறாது. முளைத்த பயிராக நீ அதை விதைக்கவில்லை. மாறாக வெறும் கோதுமை மணியையோ மற்றெந்த விதையையோதான் விதைக்கிறாய். இறந்தோர் உயிர்த்தெழும்போதும் இவ்வாறே இருக்கும். அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமையுள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது. மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது. மனித இயல்பு கொண்ட உடல் உண்டென்றால் ஆவிக்குரிய உடலும் உண்டு. மறைநூலில் எழுதியுள்ளபடி, முதல் மனிதராகிய ஆதாம் உயிர்பெற்று மனித இயல்புள்ளவர் ஆனார் கடைசி ஆதாமோ உயிர்தரும் தூய ஆவியானார். தூய ஆவிக்குரியது முந்தியது அல்ல. மனித இயல்புக்குரியதே முந்தியது. தூய ஆவிக்குரியது பிந்தியது. முதல் மனிதர் களிமண்ணால் ஆனவர் அவர் மண்ணிலிருந்து வந்தவர். இரண்டாம் மனிதரோ விண்ணிலிருந்து வந்தவர். மண்ணைச் சார்ந்த மனிதர் போலவே மண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர். விண்ணைச் சார்ந்த மனிதர் போலவே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர். எனவே நாம் மண்ணைச் சார்ந்தவரின் சாயலைக் கொண்டிருப்பதுபோல விண்ணைக் சார்ந்தவரின் சாயலையும் கொண்டிருப்போம்.

**பதில்பாடல் :** உம் முன்னிலையில் நான் நடக்க என் அடிகள்
சறுக்காமல் காத்தீர் அன்றோ.

## நற்செய்தி : லூக்கா 8 : 4 - 15

அக்காலத்தில் பெரும் திரளான மக்கள் எல்லா ஊர்களிலிருந்தும் இயேசுடம் கூடிவந்தபோது அவர் உவமை வாயிலாகக்கூறியது. "விதைப்பவர் ஒருவர் விதைக்கச்சென்றார். அவர் விதைத்தபோது சிலவிதைகள் வழியோரம் விழுந்து மிதிபட்டன. வானத்துப் பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறுசில விதைகள் பாறைமீது விழுந்தன. அவை முளைத்தபின் ஈரமில்லாததால் கருகிப் போயின. மற்றும் சிலவிதைகள் முட்செடிகளின் நடுவே விழுந்தன் கூடவே வளர்ந்த முட்செடிகள் அவற்றை நெருக்கிவிட்டன. இன்னும் சிலவிதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அவை வளர்ந்து நூறுமடங்கு விளைச்சலைக் கொடுத்தன. "இவ்வாறு சொன்னபின், "கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்று உரக்கக்கூறினார். இந்த உவமையின் பொருள் என்ன என்று அவருடைய சீடர் அவரிடம் கேட்டனர். அதற்கு இயேசு கூறியது "இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்றவர்களுக்கு எல்லாம் உவமைகள் வாயிலாகவே கூறப்படு கின்றன. எனவே அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் புரிந்துகொள்வ தில்லை. இந்த உவமையின் பொருள் இதுவே. விதை, இறை வார்த்தை. வழியோரம் விழுந்த விதைகள், அவ்வார்த்தைகளைக் கேட்பவர்களுள் சிலரைக் குறிக்கும். அவர்கள் நம்பி மீட்புப் பெறாதவாறு அலகை வந்து அவ்வார்த்தையை அவர்கள் உள்ளத்திலிருந்து எடுத்துவிடுகிறது. பாறைமீது விழுந்த விதைகள், அவ்வார்த்தையைக் கேட்கும்போது அதை மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொள்பவர்களைக் குறிக்கும். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் சிறிதுகாலமே அவ்வார்த்தையை நம்புவார்கள் சோதனைக் காலத்தில் நம்பிக்கையை விட்டுவிடுவார்கள். முட்செடிகளுக்குள் விழுந்த விதைகள், வார்த்தையைக் கேட்டும் கவலை, செல்வம், வாழ்வில்வரும் இன்பங்கள் போன்றவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சி அடையாதிருப்பவர்களைக் குறிக்கும். நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக்காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்களைக் குறிக்கும்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் சுட்டிக்காட்டப்படும் நான்கு வகையான மனநிலைகள் உள்ள மனிதர்களை எமது வாழ்விலும் பார்க்க முடியும் (அ)ஒரு சில கிறிஸ்தவர்கள் திருவருட்சாதனங்களுக்கு மட்டும் ஆலயம் வருவார்கள் அதாவது மற்றவர்களால் கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் வழியோர நிலம் போன்றவர்கள். இறைவார்த்தை இவர்களது உள்ளத்தில் அதிகமாக விழுவதில்லை. விழுகின்ற ஒரு சில இறை வார்த்தையும் பலன் தருவதில்லை (ஆ) இன்னும் சில கிறிஸ்தவர்கள் திருவருட் சாதன கொண்டாட்டங்கள் போக பெரிய வெள்ளி உயிர்ப்பு விழா, கிறிஸ்து பிறப்பு விழா போன்றவற்றிற்கு தவராமல் வந்து விடுவார்கள். இவர்கள் பாறை நிலம் போன்றவர்கள். அதாவது இறை வார்த்தை அவ்வப்போது விதைக்கப்பட்டாலும் அது சரியாக உள்வாங்கப்படாத்தன் காரணமாகவும் தகுந்த வாழ்க்கை சூழல் இல்லாத காரணமாகவும் அது பலன் தராமலே இருந்து விடுகிறது. (இ)இன்னும் சிலர் ஞாயிற்றுக் கிழைமை திருப்பலி மற்றும், வாரத்திருப்பலி க்குத் தொடர்ந்து வருவார்கள். இவர்களை முட்செடிநிலத்திற்கு நாம் ஒப்பிடலாம். அதாவது இறைவார்த்தை அடிப்படையில் நல்ல புனிதமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசை இவர்களிடம் உண்டு, ஆனால் வாழ்க்கையின் கவலைகள் பிரச்சனைகள் இவற்றினால் ஆட்கொள்ளப்படுவதன் காரணமாக அதிகப் பலன் தராமலே இருந்துவிடுகின்றார்கள். (ஈ) சில கிறிஸ்தவர்கள் மட்டும் திருவருட்சாதனம், மற்றும் திருப்பலிக் கொண்டாட்டங்களை கடமையாக அணுகாமல், அனுபவமாக அணுகுகின்றார்கள். இவர்கள் நல்ல நிலத்திற்கு ஒப்பிடப்படலாம் விதைக்கப்படுகின்ற இறைவார்த்தை உள்வாங்கி தங்கள் செயல் பாடுகள் மூலமாக முப்பது மடங்கு, அறுபது மடங்கு, நூறு மடங்கு பலனை வெளிப்படுத்துகின்றவர்கள் இவர்கள்.எனவே எல்லா சூழ்நிலையிலும், எல்லா நேரங்களிலும் நாம் திருவருட்சாதன திருப்பலிக் கொண்டாட்டங்களிலும் நாம் பங்கு கொள்வோம். இறை ஆசீர் பெறுவோம்.